-215

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – விருதுகள் – 2020–ஆம் ஆண்டுக்கான சித்திரை திங்கள் தமிழ்ப் புத்தாண்டு விழா விருதுகளுள், முதலமைச்சர் கணினித் தமிழ் விருது–2019 வழங்குதல் – விருதாளர்களைத் தெரிவு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(துவ 1.2)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.8

நாள் 08.01.2021
சார்வரி, மார்கழி – 24
திருவள்ளுவராண்டு – 2051

<u>படிக்க:</u>

1. அரசாணை (நிலை) எண்.1, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை, நாள் 04.01.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.8014/தமிழ்–1/2020, நாள் 03.12.2020.

******

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2020–ஆம் ஆண்டிற்கான சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகளுள், முதலமைச்சர் கணினித் தமிழ் விருது –2019 தவிர பிற விருதுகளான தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு.போப் விருது, உமறுப்புலவர் விருது, சிங்காரவேலர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது, மறைமலையடிகளார் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, காரைக்கால் அம்மையார் விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (10 விருதுகள்), தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது, தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது, தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது மற்றும் 2020–ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ச் சங்க (3 விருதுகள்) விருதுகள் ஆகிய விருதுகளுக்கான விருதாளர்களை தெரிவு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதத்தில், 2020–ஆம் ஆண்டிற்கான சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகளுள் ஒன்றான 2019–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு 09.10.2020 அன்று நடைபெற்ற வல்லுநர் குழுவால் தகுதியான இரண்டு பேரை தகுதியுடையவராகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், வல்லுநர் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவர்களுள் விருதுக்குரியவரை தெரிவு செய்து வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, 2019–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதினை "வாணி தமிழ் பிழை திருத்தம்" என்ற மென்பொருளை உருவாக்கிய திரு. சே. இராஜாராமன் அவர்களுக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட 2019–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதினை பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.1,00,000/–மும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்), 1 சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, காசோலைப் பேழை மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை –8.
உரிய விருதாளர் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
08.01.2021